**செய்தி வெளியீடு** **நாள் : 31.05.2025**

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகளை துரிதபடுத்தும் வகையில் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்து, அனைத்து பணிகளையும் விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.**

*******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (31.5.2025) சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம், 700 புதிய குடியிருப்புகள், புதிய சமூக நலக்கூடம் மற்றும் விளையாட்டுத் திடல் மேம்படுத்துதல், ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்புப் **பணிகளை துரிதபடுத்தும் வகையில்** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று ஆய்வு செய்து, **அனைத்து பணிகளையும் விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.**

**மாண்புமிகு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** தலைமையிலே அமைந்திருக்கின்ற இந்த அரசு வடசென்னை வளர்ச்சி திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் தந்து கடந்த 2024 ஆம் ஆண்டு 1000 கோடி என்று சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டம் என்று 6000 கோடியை தாண்டி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அனுதினமும் இந்த திட்டப்பணிகள் குறித்த முன்னேற்றத்தை **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** தொடர்ந்து திட்ட பணிகளை காணொளி வாயிலாகவும், அரங்க கூட்டங்கள் வாயிலாகவும் கள ஆய்வும் மேற்கொண்டு எங்களைப் போன்ற ஒருவர்களிடம் கைபேசியிலும் தொடர்பு கொண்டு திட்டப்பணிகள் நிலை குறித்து தொடர்ந்து கண்காணித்து வருகின்றார்கள்.

அந்த வகையில் நாம் இங்கு நின்று கொண்டிருக்கின்ற பகுதியில் கடந்த 2024 நவம்பர் மாதம் 4ஆம் தேதி வால்டாக்ஸ் சாலையில் பல்வேறு பணிகளை துவக்கி வைத்தார்கள். வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் இந்த பகுதியில் மட்டும் 700 குடியிருப்புகள் ரூபாய் 122 கோடி செலவில் கட்டப்பட அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த பணியின் வேகத்தை பார்த்தால் ஐந்து மாதங்களில் சுமார் ஐந்து அடுக்குகள் இன்றைக்கு காங்கிரிட் ஸ்லாப் போடப்பட்டு நல்ல சூழ்நிலை ஏற்பட்டுள்ளது இதே இடத்தில் ஒரே டயாலிசிஸ் சென்டர் வறுமை கோட்டிற்கு கீழே இருப்பவர்கள் தங்களுடைய உடல் நலத்தை பேணிக்காக்கவும் கட்டணம் இல்லாமல் ஒரு சில டயாலிசிஸ் சென்டர். இதே இடத்தில் அதிக அளவு வாடகை கொடுத்து திருமணங்கள் நடத்துவதற்கு சிரமமான சூழ்நிலை இருப்பதை உணர்ந்து இந்த இடத்தில் சமுதாய நலக்கூடம் என்று சொல்லப்படுகின்ற குறைந்த அளவு வாடகை ஒரு திருமணம் மண்டபம் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதோடு இன்றைய காலகட்டத்தில் உடற்பயிற்சி என்ற விழிப்புணர்வு அனைவரிடத்திலும் ஏற்பட்டிருக்கின்றது. இந்த பகுதிக்கு தேவையான அளவு ஒரு நல்ல விளையாட்டு அரங்கமும் அதே நேரத்தில் அவர்களுடைய பொழுதுபோக்கு பூங்காவும் அமைப்பதற்கு திட்டமிட்டப்படட்டுள்ளது. இந்த அனைத்து பணிகளையும் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று தொடர் ஆய்விலே ஈடுபட்டு இருக்கிறோம். எங்கள் துறையினுடைய முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்களும், இந்த வடசென்னை னுடைய மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., அவர்களும், துறையின் பல்வேறு வகையில் இருக்கின்ற பொறியாளர்கள், மாநகராட்சி மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு அவர்களும், இந்த ஆய்வில் ஈடுபட்டு இருக்கின்றோம்.

தொடர்ந்து ஸ்டான்லி அரசு மருத்துவமனை அருகில் 776 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவும் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் ஏற்படுத்தப்பட்டு அந்த பணிகளும் தற்பொழுது ஆய்வு மேற்கொள்ள இருக்கின்றோம். திட்டங்களை அறிவித்துவிட்டு அந்த திட்டங்களுக்கு தொடக்க விழாவை நடத்திவிட்டு அமருகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி இல்லாமல் தொடர்ந்து அந்த திட்டப்பணிகளை நேர்த்தியோடும் குறிப்பிட்ட கால அளவுகள் கால அளவுக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்கின்ற தொலைநோக்கு பார்வையோடு திட்டமிட்டு பணிகள் மேற்கொள்ளப்படுவதால், இந்த திட்டப் பணிகள் அனைத்தும் வடசென்னை வளர்ச்சி

Verified RealEstate™

**திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் 70-75 சதவீதம் அளவிற்கு 2026 ஜனவரி மாதத்திற்குள் நிறைவு செய்வதற்கான முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.**

எங்கள் துறையின் உடைய கூடுதல் தலைமைச் செயலாளர் அன்பிற்கினிய திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களுடன் எங்கள் துறையினுடைய உறுப்பினர் செயலாளர் அன்பிற்கினிய டாக்டர் சு.பிரபாகர், இ.ஆ.ப., அவர்களும், சென்னை பெருநகரத்தின் உடைய மாநகராட்சி ஆணையாளர் திரு.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்களும் அதே போல் சென்னை பெருநகரத்தின் உடைய குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் அன்பிற்கினிய திரு.வினய் இ.ஆ.ப., அவர்களும், ஒருங்கிணைந்த திட்ட பணிகளுக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு வழங்கி கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் இந்த திட்டப் பணிகள் விரைவுப்படுத்தப்படும். **இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வுகளின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., அவர்கள், சி.எம்.டி.ஏ. கண்காணிப்பு பொறியாளர் திரு.ராஜமகேஷ்குமார், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர் திரு.இளம்பருதி, மாநகராட்சி மண்டல அலுவலர் டாக்டர் பரிதா பானு, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

Verified RealEstate™